இலவச காலாண்டு சமய இதழ்

AKARATHEEPAM

# அகர தீபம்

WWW.AKARAM.EU 14.10.2017 - 13.01.2018




## கொழும்பு கொச்சிக்கடை
## ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம்

மாலை: 04 - மலர்: 03

திருவள்ளுவர் ஆண்டு 2048

திருச்சிற்றம்பலம்

# சைவநெறிக்கூடம்

## அருள்ஞானமிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில்

Der Verein SAIVANERIKOODAM
Arulganamigu Gnanalingesurar Tempel
Europaplatz.01, , 3008 Bern, Switzerland
☎ 078 645 30 42 / 079 275 68 62 / 076 437 48 96 / 031 302 09 56
www.saivanerikoodam.ch
facebook.com/saivanerikoodam
saivanerikoodam@hotmail.ch

# வழிபாட்டுநாட்காட்டி

*வாரத்தில் 7 நாட்களும் காலை 08.00 மணிமுதல் 20.30 மணிவரை திருக்கோவில் திறந்திருக்கும்.*

**மாலை 18.30 மணிமுதல் 20.00 மணிவரை வழிபாடு இடம்பெறும்.**

## நளி (கார்த்திகை)

| | |
|---|---|
| 03.11.17 வெள்ளிக்கிழமை | முழுமதி சிறப்பு வழிபாடு, மாலை 16.30 மணிமுதல் |
| 24.11.17 வெள்ளிக்கிழமை | நளித்திங்கள் ஈகை வெள்ளி, மாலை 18.00 மணிமுதல் |

## சிலை (மார்கழி)

| | |
|---|---|
| 03.12.17 ஞாயிற்றுக்கிழமை | சர்வாலயதீபம் முழுமதி சிறப்பு வழிபாடு, மாலை 1%.00 மணிமுதல் |
| 04.12.17 திங்கட்கிழமை | விநாயகர் கதை நோன்பு தொடக்கம், மாலை 18.00 மணிமுதல் |
| 24.12.17 ஞாயிற்றுக்கிழமை | உதயத்தின்முன் திருவெம்பாவை ஆரம்பம், காலை 5.00 மணிமுதல்<br>விநாயகர் கதை நோன்பு நிறைவு, மாலை 17.00 மணிமுதல் |
| 31.12.17 ஞாயிற்றுக்கிழமை | பிறக்கும் 2018ம் பொது ஆண்டை முன்னிட்டு இரவு 00.00 மணிக்கு சிறப்பு வழிபாடு இடம்பெறும். மறுநாள் 01.01.2018 திங்கட்கிழமை திருக்கோவில் காலை 09.00 மணிமுதல் இரவு 20.00 மணிவரை திறந்திருக்கும். |

**தபால் கணக்கு இல.:**
**Postfinance 30-468890-2**

*கணக்குரிமை:*
Verein SAIVANERIKOODAM, Laubeggstr.21, 3006 Bern, Switzerland
*வங்கி*/ Bank: Credit Suisse, 3001 Bern *கணக்குஇல* / Konto: 771 606 - 21
IBAN: CH26 0483 5077 1606 2100 0 BC Nr: 4835

## நுழைவாயில்...

அகர தீபம் ஆன்மீக வாசக அன்பர்களுக்கு வணக்கம்,

ஆன்மீகம் என்ற சொல்லைத் தவறாகத் தெரிந்து கொண்டவர்களே இன்று ஆன்மீகப் பிரசங்கம் செய்கிறவர்களில் பலர். மிகப் பெரும் பணமும் புகழும் பெற்று விளங்கும் மேடைப் பேச்சாளர்களும் அவர்களே. ஆலயங்களில் பிரசங்கம் செய்து மத புராணங்களையும் கதைகளையும் பணம் வாங்கிப் பட்டாடை அணிந்து சிரித்துச் சிரித்துப் பேசிவிட்டு அவர்கள் என்ன பேசினார்களோ அதுவே ஆன்மீகம் என நம்ப வைத்து போய்விடுவர்; ஆதீன கர்த்தர்களோடு. கூடிப் பேசி படங்கள் எடுத்து அவற்றை ஊடகங்களில் வரச் செய்து திருப்தி அடைந்து விடுவார்கள்.

இவை எதுவும் உண்மை ஆன்மீகம் இல்லை என்பதை "அறிவோம் ஆன்மீகம்" என்ற தொடர் பயனுள்ள விடயங்களை கூறி வருகிறது. இவை பலருக்கு ஏற்க முடியா தவைகளாகத் தெரியவதில் தவறு கிடையாது. ஆனால் உண்மைகள் கசப்பானவை என்பதை எமது ஆன்றோரே அறிவுரையாக கூறிச் சென்றுள்ளனர். எனவே அத் தொடரின் வருவனவற்றை நாம் ஏற்க முடியாதவை என்றாலும் அவற்றை நாம் எமது சிந்தனையில் எடுத்து ஆன்மீகத்தை உண்மையான வகையில் அறிந்து பின்பற்றி வாழ முற்படுவது எங்கள் ஆன்மாவுக்கு நாம் செய்யக் கூடிய நன்மையாகும்.

அனைத்து மக்களும் உய்மையான ஆன்மீக வாழ்வை அனுபவித்து ஆன்ம ஈடேற்றம் பெற வாழ்த்தி விடைபெறும்.

அகர தீபம்,
ஆசிரியர் குழு




அகர தீபம்

**மாலை: 04 - மலர்: 03**

**தலைமை ஆசிரியர்:**
த. இரவீந்திரன்

**உதவி ஆசிரியர்:**
ஆதவன்

**ஆசிரியர் குழு:**
வண்ணை தெய்வம்
வியாசன்

**வடிவமைப்பு:**
இ. ஈழமயூரன்

**ஒப்பு நோக்குனர்:**
திரு. செ. அமுதவாணன்



**தொடர்புகளுக்கு:**
European Tamils Union e.V.
PO. BOX 4153, 59037 Hamm
Germany
Tel: 00 49 23 81 95 66 09
Fax: 00 49 23 81 95 66 10
Email: *akaratheepam@akaram.eu*


**www.akaram.eu**

GERMANY, SWITZERLAND, FRANCE
ENGLAND, DENMARK, NORWAY
HOLLAND, SWEDEN, ITALY, CANADA


©ETU e.V. 2014. All rights reserved.



# அறிவோம் ஆன்மீகம் - 11

தமிழர் முதல் தோன்றிய மனித இனமாக மானுடவியல் அறிஞர்கள் முடிவு செய்துள்ளனர். அவர்களது மொழியும் கடவுள் கோட்பாடும் இயல்பாக தோற்றம் பெற்ற காரணத்தால் அவற்றின் தொடக்க காலமோ உருவாக்கியவர் யார் என்பதோ அறிய முடியாத விடயங்களாக உள்ளன. தமிழர்களின் கடவுட் கோட்பாடு அவர்களை வாழ வழிகாட்டிய ஒப்பற்ற தலைவர்களாக இருந்து மறைந்த மனிதர்களே என அறிய முடிகிறது.

அப்படி வாழ்ந்து மறைந்த தலைவர்களாக சிவன் முருகன் கணேசன் காளி காத்தவராயன் எல்லையன் ஐயனார் மால் இந்திரன் போன்றோரை அவர் மறைந்த பின்னர் அவரைப் போற்றி வணங்க கற்களை நாட்டி உணவுப் பண்டங்களைப் படைத்து பூக்களாலும் இலை காய் கனிகளாலும் படையல் இட்டு வழிபட்டனர். இதனை தமிழரின் நடுகல் வழிபாடு எனக் குறிப்பிடுவர்.

இன்றும் ஈழத் தமிழர் தமது இறந்த உறவினர் நினைவாக 2வது அல்லது 8வது நாளில் கல்லுக்குப் படையல் இட்டு வணங்கும் வழக்கம் உள்ளது. இது அக்காலத்தில் போரில் இறந்த அல்லது மக்களைப் பாது காக்க, பகைவரை விரட்டுதல் அல்லது விலங்குகளிடம் இருந்து பாதுகாத்தல் போன்ற பணிகளில் மரணம் அடைந்த அல்லது கொல்லப்பட்ட உறவினரின் நினைவாக நடுகல் நட்டு வழிபட்ட பண்பாட்டின் இன்றைய வடிவமே.

மேலும் சுமார் 80 வருடங்களுக்கு முன்னர் அதாவது 1940 களுக்கு முன்னர் பிரசவத்தின் பொழுது பிள்ளையைப் பெறமுடியாது மரணம் அடைந்தால் அப் பெண்ணின் நினைவாக அவளது உறவினர் கேணி அல்லது குளம் வெட்டி அருகே சுமைதாங்கி எனப்படும் ஆளுயர கல் அல்லது சாந்து கொண்டு ஒரு சிறிய சுவரை கட்டி விடுவர். அதன் மீது வழிப் போக்கர் தமது சுமையை இறக்கி வைத்து களைப்பாறிய பின் எவருடைய உதவியும் தேவை அல்லாமலே அந்தச் சுவர்மீது

உள்ள தமது பொருளை தலையில் ஏற்றிக் கொண்டு போய்விடுவர்.

குழந்தைச் சுமையோடு இறந்த பெண்ணின் ஆன்மா சாந்தி அடைய அமைக்கும் இச் சுமைதாங்கியும் நடுகல் வழக்கத்தின் ஒரு அங்கமே. கேணி போன்ற நீர் நிலைகள் அருகே இத்தகைய சுமை தாங்கிகளோடு ஆடு மாடுகள் நீர் அருந்திய பின்னர் தமது உடல்களில் ஒட்டுண்ணிகளால் ஏற்படும் நமச்சலைப் போக்க தமது உடலை தேய்த்து அமைதி அடைய சொர சொரப்பான கல் தூண்களை நட்டு வைப்பர். அவற்றை ஆ உரோஞ்சு தறி என அழைத்தனர். பின்னாளில் வந்த ஆரியர் இவற்றை எல்லாம் கடவுளர் எனக்கூறி முப்பத்து முக்கோடி தேவர்கள் எனச் சொல்லி தமது சடங்கு சம்பிரதாயங்களைப் பெருக்கி தமக்கு தர்மம் தானம் பூசை என வேலையையும் வருமானத்தையும் பெருக்கி சுக வாழ்வு அனுபவித்தனர்.

பின்னாளில் இவர்களே நாம் கோயில் கட்டி வணங்கும் சிவன் அம்மன் முருகன் என நம் இனத்தோடு வந்து கலந்து கொண்ட ஆரிய இனத்தவரால் உருவாக்கப்பட்டு வந்த இந்துமதக் கடவுள்களும் வழிபாடுகளும் ஆகும். முதலில் தமிழ் மக்களின் பல்லாயிரம் ஆண்டுகால வரலாற்றுப் பண்பாட்டு பழக்க வழக்கமாக இருந்த முன்னோர் வழிபாடு ஆரியர் வருகையால் மதக் கட்டமைப்பாக பல புராண இதிகாசக் கற்பனைக் கதைகளால் இந்துமதமாக வடிவம் பெற்றுள்ளது.

4000 வருடங்களுக்கு முன்னர் சிறு சிறு குழுக்களாக இந்தியாவின் வடமேற்கு மலை கணவாய் வழியாக ஆட்டு மந்தைகளை ஓட்டி வந்த இவர்கள் தமிழர்களின் மூதாதையரை வழிபடும் பண்பாட்டை ஒரு மதமாக கட்டமைப்புச் செய்து பூசை விதிகளையும் சடங்குகள் சம்பிரதாயங்களையும் உருவாக்கினர். அவர்கள் ஆட்சி அதிகாரம் கொண்ட மன்னர்களையும் சிற்றரசர்களையும் சொர்க்க வாழ்வு போன்ற ஆசைகளை பெற்றுக் கொடுக்க தம்மால் மட்டுமே முடியும் என நம்ப வைத்தனர். அவற்றைத் தாமே செய்யும் யாகங்கள் பூசைகள் மூலம் பெற்றுத் தர முடியும் என நம்ப வைத்து அவற்றை தாமே செய்ய முடியும் எனக் கூறி அதனை தமது ஏகபோக உரிமையாக மாற்றிக் கொண்டனர்.

இவர்களின் ஆசை வார்த்தைகளை நம்பிய அரசர்கள் வேற்று அரசரை வென்று அதிக அதிகாரம் பெறவும் சொர்க்க போகம் பிள்ளைப் பாக்கியம் போன்றவற்றைப் பெற்றுக் கொடுக்கவும் தம்மால் முடியும் என நம்ப வைத்தனர். சதிகளாலும் நயத்தாலும் கடவுள் பயத்தாலும் அரசர்களைத் தமது கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்தனர். அரசர் குடும்பத்தில் பிள்ளைகள் பெறுவது முதல் பல்வேறு சடங்குகளை நடத்தி கடைசியில் மரணச் சடங்கும் அதன் பின்னரும் இறந்தவருக்கான திவசம் திதி என மாதந்தோறும் வாரந்தோறும் வருடந்தோறும் மதச் சடங்குகளை ஏற்படுத்தி அவற்றின் மூலம் நாட்டின் பெருமளவு நிலங்களையும் அரசனின் செல்வங்களையும் தானமாகப் பெற்றனர்.

மக்களின் நிலங்களும் வளங்களும் பேராசை பிடித்த அரசர்களால் பிராமணர்களுக்குத் தானம் தர்மம் என பறித்துக் கொடுக்கப் பட்டன. மக்களோ அனைத்துச் சொத்துக்களும் பறிக்கப் பட்டு பிராமணர்களின் கொத்தடிமைகள் ஆக்கப்பட்டனர். முன்னர் கௌரவமாக வேளாளர்கள் என விளங்கிய மக்கள் இப்பொழுது பள்ளர் பறையர் எனத் தீண்டத் தகாதவர்கள் என ஏனைய தமிழர்களாலே ஒதுக்கப் படும் அவலத்துக்கு தமிழ் மக்களும் தமிழ் நாடும் தள்ளப் பட்டன.

வந்தேறிகளாகப் பிச்சை எடுத்து வந்த அரியர்கள் இப்பொழுது அரச அதிகாரிகளாவும் நிலவுடமை ஜமீந்தார்களாகவும் கோயில்களுக்கும் அரசர்கள் வர்த்தகர்கள் எனப்படும் சத்திரியர் வைசியர்களுக்கும் மேலான வர்ணமாக பிரம்மம் என்ற பிரம்மா கடவுளின் தலையில் பிறந்த பிராமணர் தாமே எனவும் சத்திரியர் பிரம்மாவின் தோளிலும் வைசியர் பிரம்மாவின் வயிற்றிலும் சூத்திரர் பிரம்மாவின் காலில் பிறந்தவர் எனவும் தமிழ் மக்களை மூன்றாகப் பிரித்து 30 க்கு மேற்பட்ட சாதிகளாகக் கூறுபடுத்தி தமிழரின் ஒற்றுமை இன அபிமானம் இரக்க குணம் அனைத்தையும் சிதைத்து சீரழித்து தம்மைச் செழுமைப் படுத்தினர்

தமிழன் கட்டிய கோயிலும் நடத்திய பூசைகளும் ஆரியரின் ஆளுமைக்குள் போயின. தமிழால் தமிழன் நடத்திய பூசைகளும் விழாக்களும் ஆரியரால் அவர்களின் சமஸ்கிருத மொழியின் தனித்துவ சொத்தாக தேவ பாஷையாக அதிகாரம் செலுத்தப் படுகிறது. அனைத்துக்கும் சொந்தக காரனான தமிழனும் அவனது தமிழ் மொழியும் நீசர்களாகவும் நீச மொழியாகவும் தமிழனது கோயிலுக்கு வெளியே தீண்டத் தகாதவையாக இந்த 21வது நூற்றாண்டிலும் உலக நாடுகள் எங்கும் வைக்கப் படுகின்றன.

இன்றைய ஈரான் ஈராக் பகுதிகள் ஊடாக வந்த வெள்ளை நிறமும் உயர்ந்த தோற்றமும் கொண்ட அரியர் என உள்ளூர் மக்களால் அழைக்கப் பட்ட ஆரியர் ஆவார். அவர்களின் வழித் தோன்றல்கள்தான் இந்து மத பூசைகள் சடங்குகளை நடத்தும் தகுதியைத் தமது பிறப்பு உரிமையாக கொண்ட அதி உயர் வர்ணம் எனப்படும் பிரம்மணர் அல்லது பிராமணர் ஆச்சாரியர்கள் பண்டிட்கள் என இன்று போற்றப் படுகின்றனர்.

இத்தகைய தமிழ் இன அழிப்பின் வடிவமாகத் திகழும் ஆரியரின் கட்டமைப்பே தமிழரின் ஆன்மீகம் என்ற பொய்ப் பிரச்சாரத்துக்கு எமது தமிழ் அறிஞர்களும் இலக்கியவாதிகளும் இராமாயணம் கருட புராணம், மகாபாரதம் பகவத் கீதை போன்ற ஆரிய புராண இதிகாசப் புரட்டு நூல்களை ஆதரமாக ஆரிய மத ஆன்மீக போதனைகளைச் செய்து வருகின்றனர். இவர்களுக்கு தமிழ் இனமோ அல்லது தமிழரின் ஆன்மீகமோ தமிழ் சித்தர்கள் சித்தாந்திகளின் போதனைகளோ இருக்கின்றன என்ற நினைவே இல்லாது ஆரிய வேதாந்தங்களை தமிழ் மக்களிடம் போதிப்பதில் பெருமை கொள்கிறார்கள்.

2009ல் முள்ளி வாய்காலில் சிங்களத்துடன் இந்தியாவும் இணைந்து நடத்திய ஈழத் தமிழ் இன அழிப்பு பற்றி இந்தப் போலி ஆன்மீக வாதிகள் ஒரு சிறிதும் கவலைப்படாத ஆன்மீகம்தான் இவர்கள் போதிக்கும் ஆன்மீகம். ஓரறிவு உயிரினம் உட்பட அனைத்து உயிர்களையும் உள்ளடக்கும் ஆன்மீகம்தான் தமிழரின் சித்தாந்தம். ஆனால் தர்மத்தின் பேரால் சத்திரிய தர்மம் என்ற வகையில் போர்களையும் கொலைகளையும் சூதாட்டங்கள் சதிகார நாசகாரச் செயல்களை நியாயப் படுத்தும் வேதாந்தம் ஆரியம் போதிக்கும் ஆன்மீகம்.

தமிழர்களின் ஆன்மீகத்தை சித்தாந்த நூல்களில்தான் தேட வேண்டுமே அல்லாது ஆரியரின் வேதாந்த நூல்களை, புராண இதிகாசக் கருத்துகளைத் தமிழர்களின் சித்தாந்தமாக போதிக்கக் கூடாது. சித்தாந்தமும் வேதாந்தமும் ஆன்மீகம் என வகைப் படுத்தலாம். ஆனால் தமிழரின் சித்தாந்தம் ஒரு போதும் ஆரியரின் வேதாந்தமாக முடியாது. குணத்திலும் குறியிலும் தமிழரின் சித்தாந்தம் பசுவைப் போன்றது. ஆரியரின் வேதாந்தம் அனைத்து வகையிலும் பன்றியைப் போன்றது.

பசுவுக்கும் பன்றிக்கும் உள்ள பேதம் ஒருபோதும் ஒப்பாகாது. பசுவைப் பசுவாக பன்றியை பன்றியாகப் பார்ப்பதுதான் அறிவு சார்ந்த ஆன்மீகம். (வளரும்)






# கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம்

கொழும்பு மாநகரில் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றாகத் திகழ்வது ஸ்ரீபொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயமாகும். இது கொச்சிக்கடைப் பகுதியில் அமைந்துள்ள சிவத்தலமாகும். தென்னிந்தியாவில் உள்ள பிரமாண்டமான கருங்கல் ஆலயங்கள் யாவும் மூவேந்தர்களாலும், நாயக்க பல்லவ மன்னர்களாலுமே கட்டப்பட்டது. அதேமாதிரியான அமைப்பில் இலங்கையில் முற்றிலும் கருங்கற்களினால் பொளிந்த சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த இந்த அழகிய கலைக்கோவிலை தமது சொந்தப் பணத்திலேயே கட்டிய பெருமை ஸ்ரீமான் பொன்னம்பல முதலியார் குடும்பத்தையே சாரும். இத்தகைய ஆலயம் இலங்கையில் இதுவே ஒன்றெனக் கூறினால் அது மிகையாகாது.


இவ்வாலயம் மானிப்பாயில் பிறந்து கொழும்பு செட்டியார் தெருவில் வசித்து வந்த கொடை வள்ளலும் தேசாபிமானியுமான ஸ்ரீமான் அருணாச்சலம் பொன்னம்பலம் முதலியார் என்ற சைவப் பெரியாரால் 1856ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. அக்காலகட்டத்தில் வாழ்ந்த கொழும்புவாழ் சைவமக்கள் தங்களது வழிபாட்டிற்காக சிறு சிறு தெய்வங்களுக்கு தெருமுனைகளில் கோவில்கள் அமைத்து வழிபட்டு வந்தனர். இதனை அவதானித்த பொன்னம்பல முதலியார் மனம் வருந்தி சிவாகம முறைப்படி பூசித்து வழிபடக்கூடிய ஓர் சிவாலயத்தை நிர்மாணிக்க முடிவு செய்து அதற்காக கொழும்பு கொச்சிக்கடைப் பகுதியில் ஐந்து ஏக்கர் காணியை கப்ரின் ஜோன் பவுல் ஸ்ரோன் என்ற ஆங்கிலேயரிடம் விலைக்கு வாங்கித் தென்னிந்தியாவில் இருந்து கோவிற்

கட்டடக் கலைஞர்களை வரவளைத்து இரண்டு வருடங்கள் இரவு பகலாக உழைத்து திருப்பணி வேலைகளை நிறைவு செய்து 1857ம் ஆண்டு மார்கழி மாதம் மகாகும்பாபிகேசத்தை சிறப்பாக நடாத்தினார். (இவ் ஆலயம் கட்டப்படும்பொழுது செங்கற்களால் சுண்ணாம்பச் சாந்து பூசியே கட்டப்பட்டது.)




போகசக்தியையும் மூலஸ்தானத்தில் பிரதிஷ்ட்டை செய்வித்தார். தனது வீட்டில் வைத்து பூசித்து வந்த பால யந்திரத்தை 32 அங்குல உயரம் கொண்டசிவகாமி அம்மாளின் பீடத்திற்கு அடியில் வைத்தும் சக்கரத்தை அதன் அருகில் வைத்தும் பிரதிஷ்ட்டை செய்வித்து பொதுமக்கள் வழிபடுவதற்காக வழி சமைத்தார். இத் திருத்தலத்தைக் காலாகாலமாகப் பராமரித்து நித்திய நைமித்திய பூசைகளையும், விழாக்களையும் எவ்வித தடங்கலுமின்றித் தொடர்ந்து சிறப்புடன் தனது தனது சந்ததியினர் நடாத்துவதற்கு எற்ற முறையில் நாத்தாண்டியாவில் ஆயிரம் ஏக்கர் தென்னந் தோட்டத்தையும் கொழும்பு மாநகரில் தொடர் கடைகளையும் கட்டி ஆலயப் பராமரிப்புக்கு அவற்றின் மூலம் பணம் பெறுவதற்கான வழிகளை வகுத்தார்.

இந்தியாவில் இருந்து வருகை தரும் யாத்திரீகளும், உணவுண்டு தங்குவதற்கு ஏற்ற முறையில் ஒரு அன்னதான மடத்தையும் கட்டினார்! தினமும் அங்கு வரும் ஏழைகளுக்கும் யாத்தரீகளுக்கும் உணவும் உடையும் வழங்கினார். வறுமை காரணமாக விவாகம் ஆகாத கன்னிப் பெண்களுக்கு தனது செலவிலேயே திருமணங்களைச் செய்து வைத்தார். அக்காலத்தில் இந்துக்களின் பூதவுடலைத் தகனம் செய்ய அதற்குரிய மயானம் இல்லாமையால் மண்ணிலேயே புதைத்து வந்தனர். அவர்களின் இவ்வலநிலையில் இருந்து மீட்கும் வகையில் ஒரு காணியை விலைக்கு வாங்கி தகனம் செய்வதற்குரிய மயானத்தையும், மடத்தையும் நிறுவி அந்திமக் கிரிகைகளை பிராமணர் 'மூலம் தமது செலவில் செய்வித்து உடலை விட்டுப் பிரிந்த ஆத்மாக்கள் சாந்தியடைவதற்கும் வழி செய்தார். இவ்விதமான கைங்காரியங்களைத் தொடர்ந்து நடாத்துவதற்கு தனது சந்ததியில் வரும் மூத்த ஆண் வம்சத்திற்கு அதிகாரத்தைச் சாசனம் மூலமாக வழங்கியிருந்தார்.



1887ம் ஆண்டு இவர் சிவபதமடைந்ததும் இவரின் மூத்த மகன் பொன் குமாரசாமி 1905ம் ஆண்டுவரை ஆலயத்தை நிர்வாகித்து

வந்தார். அவர் காலமானதும் இரண்டாவது மகனான சேர்.பொன் இராமநாதன் அவர்கள் நிர்வாகப் பொறுப்பை ஏற்றார். தந்தையரால் கல்லாலும், செங்கட்டியாலும், சுண்ணாம்புச் சாந்தாலும் கட்டிய கோவிலுக்குப் பதிலாக தற்போது உள்ள நிலையில் இருக்கும் கருங்கற் கோவிலைப் புதிதாகக் கட்ட 1907ம் ஆண்டு ஆரம்பித்தார். இதற்காக ஸ்தபதியையும், சிற்பிகளையும் தென் இந்தியாவில் இருந்து வரவழைத்தார். வியாங்கொடையிலிருந்து கருங்கற்களை வருவித்தார். ஆலயத் திருப்பணி வேலைகளைத் தாமே நேரில் நின்று மேற்பார்வை செய்து சிற்பிகளுக்கு அருகில்ச் சென்று சிவதோத்திரங்களைப் பண்ணிசையுடன் மனமுருகப்பாடி அவர்களுக்குத் தெய்வீக உணர்வை ஊட்டி அழகும் எழிலும் தெய்வீகமும் நிறைந்த திருவுருவங்களை வடிவமைக்க உந்து சக்தியாக இருந்தார். இச் செயல் தஞ்சைப் பெரிய கோவில் திருப்பணி வேலைகள் நடைபெறும் காலத்தில் இராஜ இராஜ சோழ மன்னன் தலைமைச் சிற்பிக்கு அருகில் நின்று அவருக்குத் துப்பற்படிகம் ஏந்திய செயலுக்கு ஒப்பாகும்.



சகல திருப்பணி வேலைகளும் நிறைவு செய்து 21.11.1912ம் ஆண்டு முதற் கும்பாபிகேசத்தை வெகு விமர்சையாக நடாத்தினார். சேர்.பொன். இராமநாதன் அவர்களுக்கு இத் திருப்ணி வேலைகளைச் செய்ய அக்காலத்தில் இருபது லட்சம் ரூபா செலவாகியதாம்! தற்சமயப் பெறுமதி இருநூறு கோடிக்கு மேல் இருக்கும் என மதிப்பிடப்படுகின்றது.

இவ் ஆலயத்தில் கற்ப கிரகத்தில் சிவலிங்கப் பெருமானும் போக சக்தியும் தென்முகமாக சிவகாமி அம்மாளும் இருந்து அருள் பாலிக்கின்றனர். மகா மண்டபத்தில் மிக அழகிய 30 அங்குல

உயரம் கொண்ட நடராஜப் பெருமானும் 28 அங்குல உயரம் கொண்ட சிவகாமி அம்மாளும் உள்ளனர். முதற் பிரகாரத்தில் கோஷ்ட்ட தெய்வங்களாக நர்த்தன விநாயகர், சனீஸ்வரர், சந்தான கோபாலர், தட்சணாஆர்த்தி, நாகதம்பிரான், இலிங்கோற்பவர், பிரம்மதேவருடன் துர்க்கை அம்மாளும் அமைந்துள்ளனர்.

இரண்டாம் பிரகாரத்தில் பரிவார மூர்த்திகளாக விநாயகர், சோ்க்கந்தர் (செம்பு), பஞ்சலிங்கங்கள், மகாவிஷ்ணு, வள்ளி தேவசேனா சுப்பிரமணியர், வள்ளி தேவசேனா ஆறுமுகர் (செம்பு), பிள்ளையார், இராஜ இராஜிஜஸ்வரி, அஸ்த்திர தேவர், சந்திரசேகரர், காத்தவராயர் (செம்பு), மஹாவிஸ்ணு, இராமர், சீதை, இலக்குமணனார்,ஆஞ்சநேயர் (செம்பு), நால்வர் (செம்பு), ஞானபைரவர், சுவர்ண பைரவர், நவக்கிரக நாயகர்கள், சந்திரர், சூரியர் ஆகியோர் அவரவர் சந்நிதியில் அமைந்துள்ளனர். இங்குள்ள லிங்கோற்பவ மூர்த்தி தென்னிந்திய கலைக்கோவிற் சிற்பங்களை விஞ்சுமளவிற்கு அழகும், எழிலும், கம்பீரமும் நிறைந்த திருவுருமாகும்.

மூன்றாம் வீதியில் (வெளிவீதி) காரியாலயம், சிவாச்சாரியார்கள் விடுதி, பூ மண்டபம், ஆஞ்சநேயர், மாரியம்மாள், முனியாண்டி சுவாமி, கோசாலை, தேர்முட்டி, சொர்ண புஸ்ப்பகரணி தீர்த்தத் தடாகம், அரசடிப் பிள்ளையார் போன்றவை அமைந்துள்ளன.

ஆலயக் கிழக்கு வாசலில் 65 அடி உயரங்கொண்ட அழகிய தெய்வச் சிற்பங்கள் ஐந்து தளங்களைக் கொண்ட இராச கோபுரமும். அம்பாளின் தெற்கு வாசலில் 35 அடி உயரங்கொண்ட மூன்று தளங்களுடைய கோபுரமும் ஆலய வளாகத்தின் கிழக்கு மேற்கு நுளைவாசல்களில் இரு சிறிய கோபுரங்களும் அமைந்துள்ளன. உள் மண்டப கற் தூண்களிலும், சுவர்களிலும் கண்ணப்ப நாயநார் தன் இடது கண்ணைத் தோண்டி இலிங்கத்தில் அப்ப ஆயுத்தமாகும் காட்சி, அத்துடன் சிவனின் ஊர்த்தவ தாண்டம், அம்பாளின் தாண்டம், இடது பக்கத்தில் உமையும், சிவனும், அர்த்த நாரீஸ்வரர், பைரவர், பழனி ஆண்டவர், இலக்குமி, பிருங்கி முனிவர், சமய குருவர், பதஞ்சலி முனிவர், வியாக்கிரபாதர், பிச்சாடனர், நான்முகன், தட்சணாமூர்த்தி, நந்திதேவர், மத்தளத்துடன் நாரதர், இருதலை ஒரு உடல் உள்ள மிருகம், பசு இலிங்கத்திற்குப் பால் சுரத்தல், பாயும் சிங்கம், அன்னப்பறவைகள், கலைமான், ஐந்து தலை நாகம், யானை மரத்தை முறித்துக் குழை தின்னுதல், எருது மரத்தை எட்டிக் குழை தின்னுதல், மந்தி, யானையின் காலடியில் மனிதன், மீனை விழுங்கும் கொக்கு, இரட்டைத்தலையுடைய கிளி, இரட்டைத் தலையுடைய மயில், யானைமேற் பாயும் சிங்கம், ஆடும் மயில், இரு தலை ஒரு உடற் சிங்கம், மூன்று தலை ஒரு உடற் கழுகு, போன்ற சிற்பங்கள் மிகவும் கலை நுணுக்கத்துடன் தத்தருபமாக செதுக்கப்பட்டுள்ளன!.



தரிசன மண்டபத்தின் மேற்புறத்தில் 12 ராசிகளும் சிறப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன. நவக்கிரகத்திற்கு தென்மேற்கில் உள்ள கற் தூணில் சேர் பொன் இராமநாதன் அவர்களதும் அவரது துணைவியார் அவர்களது உருவங்களும் இரு வட்ட வடிவத்திற்குள் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளது. நவக்கிரகத்தின் தென் மேற்கில் உள்ள கற் தூணில் 18 தமிழ் எழுத்துக்களைக் கொண்ட சிற்பக்கவி சக்கர வடிவத்திற்குள் அமைந்துள்ளது.

நித்திய, நைமித்திய பூசைகளும், ஆறுகாலப் பூசைகளும், விரதங்களும், அபிஷேகங்களும், பொங்கல்களும், குளிர்ச்சி போன்றவைகளும்சிவாகம முறைப்படி நடைபெற்று வருகின்றன. ஆலய வருடாந்தவ மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பித்து பத்தாம்நாள் பங்குனி உத்தரத்தன்று தீற்தோற்சவத்துடன் நிறைவு பெறும். தேர்த்திருவிழா அன்று சோமஸ்க்கந்தர், அம்மாள், சண்டேஸ்வரர் ஆகியோர் தத்தமது அழகிய சிற்பத் தேர்களிலும், விநாயகர், முருகர் ஆகியோர் தங்களது வாகனங்களிலும் ஆரேகணித்து வீதி வலம் வருவர். அம்பாளின் தேரைப் பெண்களே வடம் பிடித்து இழுப்பது வழக்கமாகும். சுவாமி வெளி வீதி வருழ் பொழுதில் நவசந்தித் திருமுறைகள் ஓதப்படுகின்றன. அதிகாலை திருபள்ளியெழுச்சிப் பாராயணத்துடன் பூசைகள் ஆரம்பமாகின்றன. தினமும் சுவாமி பள்ளியறையில் இருந்து பல்லக்கில் புறப்பட்டுத் திரும்புவது வழக்கமாகும். காலையில் கோமாதாவுக்கும் பூசை நடைபெறும். காலை ஏழு மணிக்கும், மாலை ஏழு மணிக்கும் நடைபெறும் பூசையில் நித்தியாக்கினி வளர்க்கப்படும். ஆலயத்தின் கோசாலையில் உண்ள பசுக்களில் இருந்து பால், தயிர், நெய், கோசலம், கோமயம், போன்றவை அபிசேகங்களுக்குப் பாவிக்கப் படுகின்றன.


ஸ்ரீ சிவதர்ம சம்வர்தன பாடசாலையும், அறநெறிப் பாடசாலையும் ஆலய நிர்வாக மேற்பார்வையில் நடைபெற்று வருகின்றன. பன்னிரு திருமறைகளோதல் ஆலய மண்டபத்துக்குள் வருடா வருடம் நடைபெற்று வருகின்றது. இவ் ஆலயத்தில் ஒரு முகாமையாளரும், ஆறு சிவாச்சாரியார்களும், நான்கு உதவி ஐயர்களும், ஒரு மடப்பள்ளி ஐயரும், ஒரு ஓதுவார் மூர்த்தியும், மூன்று மாலை கட்டும் பண்டாரங்களும், மேள வாத்தியக் காரர்களும், சுவாமி காவுவோர்களும், கோசாலைப் பராமரிப்பாளர்களும், மூன்று பாதுகாப்பாளர்களும், பல சிற்றூளியர்களும் உள்ளனர்.

பிரதம் சிவாச்சாரியாராக சிவஸ்ரீ சி.குஞ்சிதபாதக் குருக்கள் 1949ம் ஆண்டிலிருந்து 2006ம் ஆண்டு தை மாதம்வரை சிவப்பணி புரிந்து இறையடி சேந்தார். அவரைத் தொடர்ந்து சிவஸ்ரீ வை. பாலசுந்தரக் குருக்கள் பிரதம சிவாச்சாரியாராக சிவப்பணி ஆற்றுகின்றார். தற்பொழுது ஸ்ரீமான் அ.பொன்னம்பல முதலியார் வம்சத்தின் வழிவந்த முகாமத்தவத் தர்மகத்தா ஸ்ரீமான் தே.ம.சுவாமிநாதன் தலைமையில் ஐந்து பேர் கொண்ட உறுப்பினர்களால் ஆலயம் திறம்பட பரிபாலனம் செய்யப்பட்டு வருகின்றது. ஆலய பராமரிப்புச் செலவிற்காக உண்டியல் பணத்தை எதிர்பாராத ஆலயம் இது ஒன்றே எனக் கூறலாம்.

இவ் ஆலயம் சிற்ப சாத்திரக் கட்டிடக்கலையமைந்த அமைப்பையும், சிவாகம விதிகழுக்கமைந்த கிரியை நெறிகளையும் கொண்ட சைவக் கலைக் களஞ்சியமாகத் திகழ்வது சைவ மதத்திற்கு பெருமை தரும் விடயமாகும்.

# மனம் என்பதும் அகந்தையும்

- ரமணர்



மனம் எப்போதும் ஒரு தூல வடிவை அனுசரித்து நிற்கும். தனியே நில்லாது. மனமே சூட்சும சரீரம் என்றும் ஜீவன் என்றும் சொல்லப்படுகிறது.

நினைத்தல், நிச்சயித்தல் என்பன மனதின் தர்மங்கள். இதுவே இந்திரியங்களுக்குக் கண்போன்ற இடம். இந்திரியங்கள் வெளியே இருப்பதால் ''புறக்கரணம்'' என்றும், மனம் உள்ளே இருப்பதால் ''அகக்கரணம்'' என்றும் அறியப்படுகின்றன.

எண்ணங்களின் குவியலே மனம். அகந்தை இல்லாமல் மனம் இருக்க முடியாது. ஆகவே எல்லா எண்ணங்களிலும் அகந்தை இருக்கிறது.


வலிமையாகச் சிந்திக்கும் போதுதான் மனம் வலிமை பெறுகிறது என்பது பொதுவான எண்ணம். ஆனால் எண்ணங்களிலிருந்து விடுதலைப்பட்ட மனமே வலிமையானது.

மனம் அலைபாயும் போது, சக்தி எண்ணத்தினால் சிதறிப் போய் பலவீனமடைகிறது. மனம் ஒரே எண்ணத்தோடு இருக்கும்போது சக்தி சேமிக்கப்படுகிறது, மனம் வலிமை பெறுகிறது.



# அமர்நீதி நாயனார்

"சிந்தை செய்வது சிவன் கழலல்லது ஒன்றில்லை" என்ற வாக்கியத்துக்கேற்றார்போல் சிறந்த சிவபக்தர் அமர்நீதி நாயனார். இவர் கும்பக்கோணம் அருகிலுள்ள பழையாறை என்னும் ஊரில் வணிகர் குலத்தில் பிறந்தவர். வணிகத்தில் நல்வழியில் ஈட்டிய செல்வத்தின் பெரும்பகுதியை சிவத்தொண்டிற்கு செல்வழித்தார். அன்னம், வஸ்திரம் தானம் செய்வதோடு கோவணம் தானம் செய்வதை முதன்மையாய் கொண்டிருந்தார்.



திருநல்லூர் என்ற ஊரில் சிவமடம் ஒன்றை கட்டி, திருவிழா காலங்களில் தன் குடும்பத்தோடு சென்று இக்கைங்கரியங்களை செய்து வந்தார். அமர்நீதி நாயனாரின் பெருமையை உலகறிய செய்ய நேரம் வந்ததை உணர்ந்து அந்தணர் குல பிரம்மச்சாரியாய் உருக்கொண்டு கோமணம் மட்டும் அணிந்து இரு கோவணம் முடிந்த தண்டுடன் திருநல்லூரிலிருக்கும் அமர்நீதியார் மடத்திற்கு வந்தார்.



தன் மடத்திற்கு வந்திருக்கும் சிவனடியாரை இன்முகத்தோடு பாதபூஜை செய்து வரவேற்று,

திருஅமுது செய்ய அழைத்தார். அதற்குமுன் தான் நீராட வேண்டுமெனவும், வானம் மப்பும் மந்தாரமுமாய் இருப்பதால் அணிந்துக்கொள்ள வேண்டிய கோவணத்தை தான் எடுத்து செல்வதாகவும், மிச்சமுள்ள மற்றொரு கோவணத்தை அமர்நீதியாரிடம் கொடுத்து தான் நீராடி வரும்வரை பத்திரமாய் வைத்திருக்க சொன்னார். கூடவே கோவணத்தின் அருமை பெருமைகளையும் ஆஹா ஓஹோவென புகழ்ந்தும் சென்றார்.

அமர்நீதியடிகளும் சிவனடியார்களுக்கு தானம் செய்ய வைத்திருந்த உடைகளில் இக்கோவணத்தை பத்திரப்படுத்தாமல் வேறொரு பத்திரமான இடத்தில் வைத்து அதுக்கு காவலும் ஆட்களை நியமித்தும் சென்றார். ஆனால், இறைவன் நுழையமுடியாத இடம் ஏதுமில்லையே! அக்கோவணத்தை இறைவன் மறைய செய்தான்.

சிவனடியார் ரூபத்தில் வந்த ஈசன் காவிரியில் நீராடியும் உடன் மழையில் நனைந்தும் உடல் நடுங்கியபடி வந்ததை கண்டு உடல் துவட்டிக்கொள்ள துண்டொன்றை நீட்டினார். இதெல்லாம் எதற்கு?! எதிர்பாராதவிதமாய் ,மழை வந்ததால் என்னிடமிருந்த கோவணம் நனைந்துவிட்டது. அதனால் உன்னிடமுள்ள கோவணத்தை எடுத்து வாவென கட்டளை யிட்டார். கோவணத்தை எடுக்க உள்சென்ற அமர்நீதியார் அங்கு கோவணம் காணாது திகைத்து நின்றார். எங்கு தேடியும் அடியவரது கோவணம் கிடைக்காமல் போகவே, வேறொரு கோவணத்தை எடுத்து வந்து, ஐயா! தாங்கள் எனக்களித்த பொறுப்பிலிருந்து தவறிவிட்டேன்,. கட்டுக்காவலில் வைத்திருந்த தங்கள் கோவணம் ஏதோ மாயவித்தையால் காணாமல் போய்விட்டது. அதற்கு பதிலாக இதை ஏற்றுக்கொள்ளுங்கள். இது மற்ற ஆடை யிலிருந்து கிழிக்கப்பட்டதல்ல. கோவணமாகவே நெய்தது. எனவே தயவுகூர்ந்து அடியேனது பிழையை பொறுத்தருளி இதை ஏற்றுக்கொள்ளுங்கள் என வேண்டி நின்றார்.




அமர்நீதியாரின் பேச்சை கேட்டு சீறி விழுந்தார். ஓ! ஊரெல்லாம் கோவணம் கொடுப்பதாய் நாடகமாடி உன்னிடமுள்ள கோவணங்களை கொள்ளை லாபத்தில் விற்க இப்படி செய்தாயா என சினந்தார் ஈசன். உங்களிடம் கொடுக்கும்போதே பத்திரமாய் வைத்திருக்க சொன்னேனே. இப்பொழுது என் கோவணத்தை தொலைத்துவிட்டு வேறொரு கோவணத்தை கொடுத்து ஏற்றுக்கொள்ளுங்கள் என்பது என்ன நியாயம்?! என் இடுப்பிலிருக்கும் கோவணம் மற்றும் தண்டிலிருக்கும் நனைந்த கோவணத்துக்கு ஈடானது அந்த கோவணம். மழையில் நனைந்த உடம்பு நடுக்கமாய் உள்ளது. தண்டிலிருக்கும் கோவணமும் உதவாது. இப்படியே நடுக்கத்திலிருந்தால் ஜன்னி வந்து சாகவேண்டியதுதான் என கடிந்துக்கொண்டார்.

ஐயா! தயவுசெய்து என் பிழையை பொறுத்துகொள்க. ஈரத்தால் உங்கள்

உடல் தள்ளாடமல் இருக்கவாவது நான் தரும் கோவணத்தை ஏற்றுக்கொள்ளுங்கள். நான் வேண்டுமானால் தண்டிலிருக்கும் கோவணத்தின் எடைக்கு ஈடாய் புது கோவணங்களை தருகிறேன் என பணிந்து மன்றாடினார். சிவனடியாரும் பெரிய மனது செய்து கோவணத்துக்கு ஈடான கோவணத்தை வாங்கிக்கொள்ள சம்மதித்தார்.

துலாக்கோலை கொண்டு வந்து ஒரு தட்டில் அடியவரது கோவணமும், இன்னொரு தட்டில் தன் கையிலிருந்த கோவணத்தை வைத்தார். துலாக்கோலில் உள்ள தட்டு அடியவர் பக்கமே தாழ்ந்திருந்தது. மேலும் சில கோவணங்களை தன்பக்கமுள்ள தட்டில் வைத்தார். அப்படியும் அடியவர் பக்கமிருந்த துலாக்கோல் தட்டு தாழ்ந்தே இருந்தது. இப்படியே அமர்நீதியார் தன் இருப்பிலுள்ள அனைத்து கோவணத்தையும் துலாக்கோலில் கொண்டு வந்து வைத்தார். அப்பிடியும் தட்டு கீழிறங்காததால் தன் இருப்பிலுள்ள அனைத்து வெள்ளி, தங்கம், நவரத்திணங்கள் வைத்தும் தட்டு கீழிறங்காமல் இருந்தது.



ஐயா! என்னிடமிருந்த கோவணங்களையும், நல்வழியில் ஈட்டிய பொருளனைத்தும் வைத்தும் உங்கள் கோவணத்துக்கு ஈடாகவில்லை. அதனால், மறையவரே! நானும், என் மனையாளையும் என் மகனையும் துலாக்கோலில் இடுகிறேன். தங்கள் அடிமையாய் ஏற்றுக்கொள்ளுங்கள். தாங்கள் காலால் இட்ட வேலையை தலையால் செய்வோமென அமர்நீதியார் ஈசனின் ஐந்தெழுத்து நாமத்தை மனதாற தொழுது துலாக்கோலில் குடும்பத்தோடு நின்றார்.

இதற்குமேலும் சோதிக்கலாகாது என எண்ணிய அடியாராக வந்த ஈசன் அமர்நீதியார் பக்கமிருந்த துலாக்கோல் இறக்கி, திருநல்லூரில் எழுந்தருளும் அம்மையப்பராக காட்சியளித்து அமர்நீதி நாயனாரையும் அவர்தம் குடும்பத்தாரையும் ஆட்கொண்டார்.

ஆனிமாதம் பூரம் நட்சத்திரத்தில் அமர்நீதிநாயனார் குருபூஜை கொண்டாடப்படுது.

# ராமாயணம் வலியுறுத்தும் நல்ல செயல்கள்!



அதிர்ஷ்டம் வந்தால் ஆனந்தக்கூத்தாடுவதும், துன்பம் வந்தால் துவண்டு போவதும் கூடாது. எதிலும் நிதானமாக இருப்பது நல்லது.

- சத்தியம் தான் நமக்கு உற்ற துணை. எப்போதும். உற்சாகத்தை இழக்கக் கூடாது. பிறப்பும், இறப்பும் உலகின் இயற்கை என்பதை உணர்ந்து பணிவோடு நடக்க வேண்டும்.


- உடலையும், உள்ளத்தையும் தூய்மையான நிலையில் வைத்து, பக்தி சிரத்தையுடன் சேவை செய்ய வேண்டும். நல்ல செயல்கள் செய்வதில் தயக்கம் கூடாது.

- ராமபக்தியுடன் வாழ்பவர்கள் பரிசுத்தம், மகிழ்ச்சி பெற்று இம்மையிலும் மறுமையிலும் மேன்மை அடைவார்கள்.

## ஆலயங்களுக்கான அறிவித்தல்!

'அகரதீபம்' இதழை
பெற்றுக்கொள்வதற்கும்,
ஆலயங்களுக்கான
விளம்பரங்களைப் பிரசுரிக்கவும்
எம்மோடு தொடர்புகொள்ளவும்!

தொர்புகளுக்கு:
00 49 23 81 98 77 897
00 49 176 47 11 87 11





# ஆன்மீகத்தைத் தெரிந்து கொள்வோம்!

ஆலயங்களில் பல விதமான தீபங்களை ஆராதனையின் போது சுவாமிக்குக் காட்டுகின்றார்களே! அதன் அர்த்தம் என்ன?

தீபாராதனையின் வரிசையாக அலங்கார தீபம், ஐந்து தீபம், மூன்று தீபம், ஒரு தீபம், முடிவில் கற்பூர தீபம் என்று தீபங்களைக் காட்டும் வழக்கம் இருந்து வருகின்றது. பலவாகக் காணும் உலகம், ஐம்பூதங்களில் ஒடுங்கி, அது முக்குணங்களில் ஒதுங்கி, அதுவும் ஒன்றுபட்டு, முடிவில் திரியின் கரியான அகங்காரமும் அழிந்து கர்ப்பூரம் போல் நிர்க்குணமான பரம்பொருளில் மறைகின்றது என்பது கருத்தாகும்.

திருவிளக்கில் உள்ள சுடரை நாம் குளிரச் செய்யலாமா? அல்லது தானாகக் குளிர வேண்டுமா?

திருவிளக்குச் சுடரைப் பூவில் பாலைத் தொட்டு நாம் குளிரச் செய்ய வேண்டும். அரிசியை விளக்கில் எண்ணை இருக்கும் எந்தப் பகுதியிலாவது முதலில் வைத்துவிட்டு பின்பு பூவினால் குளிரச் செய்யும் வழக்கமும் இருக்கின்றது.

வெங்கடாசலபதியின் பூசையின்போது நெய் விளக்கு ஏற்றப்படுகின்றது. அப்போது பூசை

முடிந்ததும் நெய் தீர்ந்து தானாகவே சுடரைக் குளிரச் செய்வதை சுவாமி மலை ஏறுகின்றார் என்கின்றார்கள்.

பூசைக்குப் பயன்படுத்திய பூவினாலும் (நிர்மால்யம்) சுடரைக் குளிரச் செய்யலாம். குளிரச் செய்யப்பெற்ற தீபங்கள் தங்களுக்குள் எனக்குப் பூ கொடுத்தார்கள். உனக்கு என்ன கொடுத்தார்கள்? என ஒன்றை ஒன்று விசாரித்துக் கொள்கின்றன என்று ஒரு கதை சொல்வார்கள்.

இவையெல்லாம் திருவிளக்குச் சுடரை வாயினால் ஊதி அணைக்கக்கூடாது என்னும் கருத்தை மக்கள் மனதில் பதிய வைப்பதற்காக எழுந்த கதையென நாம் எடுத்துக்கொள்ளலாம்.

இறைவனை பூஜைப்பதற்கு எந்தெந்தப் பூக்களைப் பயன்படுத்தக் கூடாது? எந்த எந்த நேரங்களில்கோயிலுக்குப் போகக்கூடாது?.

வாசனை இல்லாத பூக்களையும், மகரந்தம் இல்லாத பூக்களையும் பூஜைக்கு உபயோகிக்கும் பழக்கம் இல்லை. கோவிலின் சன்னதி திறந்திருக்கும் நேரங்கள்அனைத்தும் கோவிலுக்குப் போவதற்கு உரிய நேரங்கள்தான்.

பூஜையின்போது மணி அடிப்பதன் காரணம் என்ன?

நாத தத்துவத்தை நினைவு படுத்தும் பொருட்டு பூஜையின்போது மணி அடிக்கப்படுகின்றது. இது முதலாவது காரணம்.

உலகியல் வேலைகளில்மூழ்கியிருக்கும் மக்கள் மணியோசையைக் கேட்டுத் தெய்வ சிந்தனையிர் ஈடுபட வேண்டும். இது இரண்டாவது காரணம்.

கோவிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்த பின்பு அங்கேயே சிறிது நேரம் உட்காலீர்ந்து வரவேண்டும் என்னும் நியதி இருக்கின்றதா?

கோவிலுக்குச் சென்று தெய்வத்தை வழிபட்ட பின்பும் தெய்வத்தைப் பற்றிய சிந்தனை நமது உள்ளத்தில் தொடரவேண்டும். கோவிலில் தெய்வத்தை தரிசித்த பின்பு அங்கு அமைதியாகச் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தால் தெய்வம் நமக்குக் கூறுவது என்னென விளங்கும்.

நாம் தெய்வத்தை வழிபட்டால் மட்டும் போதாது. தெய்வத்தின் பதிலுக்கும் நாம் அமைதியாகச் செவிசாய்க்க வேண்டும் என்பது இந்த வழக்கத்தின் நோக்கமாகும்.

ஸ்ரீ ராமகிருஸ்ணர் தீர்த்த யாத்திரையைப் பற்றித் தெரிவித்த ஒரு கருத்து.

'வயிறு நிறையப் புல்லைத் தின்ற பசு ஓர் இடத்தில் அமைதியாகப் படுத்துக்கொண்டு அசைபோடுகின்றது. அதுபோலவே தீர்த்த யாத்திரைக்கு நீ சென்று வந்தால் அந்தத் தெய்வீகத் தலத்தில் உன் மனதில் எழுந்த தூய எண்ணங்களைப் பற்றிச் சிந்தித்து தனி இடத்தில் உட்கார்ந்து அவற்றிலேயே ஆழ்ந்து போகவேண்டும். அவ்விதமின்றி அங்கிருந்து வந்ததும்அந்த எண்ணங்கள் உனது மனதைவிட்டு அகன்று போகும்படி நீ உலகியல் விவகாரங்களில் தலையிடுவது கூடாது."



# பைரவர் வழிப்பாட்டால் சனீஸ்வரனால் ஏற்படும் கஷ்டங்கள் நீங்கும்

ஆகமங்கள், சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள அஷ்ட பைரவர் விளக்கங்களை கூர்ந்து நோக்கினால் தெள்ளத் தெளிவாக விளங்கும்.

அஷ்ட பைரவர்களும் அறுபத்தி நான்கு காலங்களில், அறுபத்தி நான்கு தோற்றங்கள் கொண்ட பைரவராகக் காட்சி தருகிறார்கள்.

12 ராசிகளையும் தன் உடலில் அங்கங்களாகக் கொண்டவர் ஸ்ரீபைரவர்.

நவக்கிரகங்களுக்கும் பிராண தேவதையாக இருப்பவரும் பைரவரே.

தேவ, அசுர, மானிடர்களும் அஞ்சும் கிரகம் சனி பகவான் ஆவார். சனிக்கு வரம் தந்து, இக்கடமையைச் செய்ய வைத்த சனியின் குரு ஸ்ரீபைரவரே ஆவார்.

சனியின் வாத நோயை நீக்கியவரும் பைரவரே.

தன் தமையன் எமன், பைரவரிடம் அதீத சக்திக்கு வரம் பெற்றதைக் கண்ட அவன் தம்பி சனீஸ்வரன், பைரவரை நோக்கி கடுமையான தவம் இருந்தான்.

தவ வலிமையால் பைரவர் அவன் முன் தோன்றி, மும்மூர்த்திகள் உள்பட அனைவரையும், கால வர்த்தமான நிர்ணயப்படி (ஜோதிட ரீதியாக சனிப்பெயர்ச்சிப்படி) நல்லது தீயது செய்யும் சக்தி அருளினார்.

அப்போது சனீஸ்வரனிடம் ஒரு சத்தியபிராமாணம் பெற்றுக் கொண்டார்.

சனீஸ்வரனின் சஞ்சாரத்தால் எவர் ஒருவருக்கு கஷ்டம் கொடுக்க வேண்டியிருந்தாலும், அவர்கள் பைரவரை வழிபட்டு சரணடைந்தால் அவர்களுக்கு சனீஸ்வரன் நன்மையையே செய்ய வேண்டும் என பைரவபெருமானிடம் விரும்பினார்.

அதனால்தான், ஏழரை நாட்டுச்சனி, அஷ்டமச்சனி, ஜன்மச்சனியால் அவதிப்படுவோர் பைரவ வழிபாடு ஒன்றினால் மட்டுமே அத்தொல்லைகளிலிருந்து விடுபட முடியும்.



# பெண்ணை ஏளனமாய் நினைத்த மகிஷாசுரன்

நவம்ன்னா ஒன்பதுன்னு அர்த்தம். அன்னை சக்தி தேவியை 9 நாட்களும் வெவ்வேறு ரூபங்களில் வழிபடும் மக்கள், மகிஷாசுரனை தேவியானவள் 9 நாட்கள் போரிட்டு வெற்றிவாகை சூடிய நாளை விஜயதசமியாகக் கொண்டாடி மகிழ்கின்றனர். மகிஷாசுரனுடன் போரிட்ட தேவி, பத்தாம் நாள் அவனை வென்றதையே விஜய தசமி பண்டிகை குறிக்கிறது. விஜய்ன்னா வெற்றி, தசமி ன்னா பத்து (தசம் என்றால் பத்து). இதனையே விஜயதசமின்னு சொல்றோம். எனவே 9 நாட்களும் விரதமிருந்து வழிபடுவோர், 10ம் நாளான இன்று அன்னையின் வெற்றியைக் கொண்டாடி விரதத்தை முடித்துக் கொள்வதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.

விஜயதசமிக்கு மற்றொரு பொருளும் உண்டு. நவராத்திரியின் ஒன்பது நாளும் விரதமிருந்து தூய்மையான உள்ளத்துடனும், பக்தியுடனும் வழிபட்டவர்கள் இல்லம் தேடி, பத்தாம் நாளான தசமி அன்று அம்பாள் விஜயம் செய்யும் நாளே 'விஜயதசமி' என்றும் கூறப்படுகிறது. அன்று அம்பாளே நம் இல்லம் தேடி வருகிறாள் என்றால் இந்நாளின் சிறப்பு பற்றி சொல்லவும் வேணுமோ?!

நவராத்திரியின் ஒன்பதாவது நாளான மகாநவமி என்று சொல்லப்படும் ஆயுத பூஜையன்று தொழில்களையும், கல்வியையும், கலைகளையும் போற்றும் விதமாகவும், அதற்கடுத்த நாள் விஜயதசமி என்று வெற்றித் திருநாளாகவும் உலகெங்கும் உள்ள இந்துக்கள் ஆதிக்காலம் தொட்டுக் கொண்டாடி வருகின்றார்கள். இத்திருநாளில் ஏடு தொடங்குதல், புதிய வியாபாரம், புதிய தொழில் ஸ்தாபனங்கள் போன்றன ஆரம்பிப்பதால் வெற்றியும் புகழும் கிடைக்கும் என்பது ஐதீகம்.

குழந்தைகளுக்கு விஜதசமி தினத்தன்று ஆரம்பக் கல்வியை இந்த நாளில் ஆரம்பித்து வைப்பது

தொன்று தொட்டு நடந்து வருகிறது. மேலும் அன்று தொடங்கும் அனைத்து நற்காரியங்களும் வெற்றி தரும் என்பது ஐதீகம்.

மகிஷாசுரன், சண்ட முண்டர்கள், சும்ப நிசும்பர்கள் ஆகிய கொடிய அரக்கர்களை அன்னை பராசக்தி அழித்து வெற்றி கொண்ட திருநாள். தீமையின் உருவான பத்து தலை ராவணனை ஸ்ரீராமன் போரில் வென்ற திருநாள். இதன் நினைவாகவே வடநாட்டில் ராம்லீலா நிகழ்ச்சி நடத்தப்படுது. பாண்டவர்கள் தர்மத்தின் வெற்றிக்காக தங்கள் ஆயுதங்களையும், அன்னை துர்க்கையையும் வழிபட்டது இந்நாளில்தான்....

நவராத்திரியில் ஸ்ரீதேவியைத்(திருமகளைத்) துதித்து வழிபடுவோர்களுக்கு தேவி சகல சௌபாக்கியங்களையும் வழங்குவாள் என்பது ஐதீகம். தேவியானவள் அனைத்து உருவத்திலும் எல்லா இடங்களிலும் வியாபித்திருக்கிறாள் என்பதைக் குறிக்கும் விதமாகவே அனைத்து உருவ பொம்மைகளையும் கொலுவாக வைத்து வணங்கும் கலாச்சாரம் வழக்கத்தில் உள்ளது.

பிரம்மதேவரை நோக்கி கடுமையான தவம் இருந்தான் மகிஷன் என்னும் அசுரன். அவனது தவத்தைக் கண்டு மனம் இரங்கிய பிரம்மதேவர், அசுரனின் முன்பு தோன்றினார். அவரைக் கண்டதும் மகிஷன் மகிழ்ச்சியில் திளைத்தான். பின்னர் தனக்கு அழிவில்லாத வரத்தைத் தருமாறு பிரம்மதேவரிடம் கேட்டான். ஆனால் பிறந்த அனைவருக்கும் இறப்பு நிச்சயம். எனவே வேறு வரம் கேட்கும்படி பிரம்மதேவர் கூறினார். இதையடுத்து, 'தனக்கு அழிவு என்று ஒன்று வந்தால், அது பெண்ணாலேயே வர வேண்டும்' என்ற வரத்தை மகிஷன் கேட்டான். பிரம்மதேவரும் அவன் கேட்டபடியே வரம் அருளி மறைந்தார். மகிஷனின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. பெண்கள் மென்மையானவர்கள். அவர்களால் நமக்கு ஆபத்து வர வாய்ப்பில்லை என்பது மகிஷனின் எண்ணம்.

பெண்ணால் மரணம் வராது என்ற தைரியத்தில் தேவர்கள், ரிஷிகள், முனிவர்கள் என அனைவரையும் கொடுமைப்படுத்தினான். மகிஷனின் தொல்லையால், தேவர்கள் அனைவரும் துன்பத்தில் ஆழ்ந்தனர். துன்பம் எல்லை கடந்ததால் அவர்கள் மகாவிஷ்ணுவிடம் சென்று மகிஷனிடம் இருந்து தங்களைக் காத்தருளும்படி வேண்டி நின்றனர். 'மகிஷனுக்கு பெண்ணால்தான் மரணம் என்று உள்ளது. எனவே நீங்கள் அன்னை பராசக்தியிடம் சென்று வேண்டுங்கள்' என்று கூறி தேவர்களை அனுப்பிவைத்தார் மகாவிஷ்ணு. தேவர்கள் சக்தியை நோக்கி வழிபட்டனர். அதன் பயனாக அவர்கள் முன்பு மகாலட்சுமி தோன்றினாள். 'மகாலட்சுமி' என்பதற்கு எல்லாவிதமான லட்சணங்களையும் கொண்டவள் என்பது பொருளாகும். அவளிடம் தேவர்கள் வைத்த வேண்டுகோளுக்கு இணங்க, தேவர்களை காக்கும் பொருட்டு தேவியானவள் போருக்கு ஆயத்தம் ஆனாள்.

சிவபெருமான், அன்னைக்கு சூலத்தை வழங்க, விஷ்ணு பகவான் சக்கரத்தைக் கொடுத்தார். அக்னி தனது சக்தியையும், வாயு வில்லாயுதத்தையும் வழங்கினர். இப்படியாக ஒவ்வொருவரும் அவரவர் ஆயுதத்தை வழங்கினர். அவற்றைப் பெற்றுக்கொண்ட அன்னை, மகிஷாசுரனை அழிப்பதற்காக புறப்பட்டுச் சென்றாள். போர்க்களம் புகுந்ததும் தன் நின்ற மகிஷனைப் பார்த்து அன்னைக்கு இரக்கம் ஏற்பட்டது. அவனைக் கொல்வதை விடுத்து முதலில் பாசத்தை வீசி தன் வசப்படுத்த நினைத்தாள். ஆனால் அது முடியாமல் போனது. ஏனெனில் தீயவை எதுவும் நல்லதை விரும்பாது. என்ன செய்தாலும் அது தீவினையை மட்டுமே சார்ந்திருக்கும். அதற்கு அழிவு மட்டுமே முடிவு என்பதை உணர்ந்து கொண்ட அன்னை, 9 நாட்கள் போரிட்டு 10ம் நாளில் மகிஷாசுரனை அழித்தாள். அப்போது தேவர்கள் அனைவரும் மேலுலகில் நின்று பொம்மை போல் பார்த்துக் கொண்டிருந்தனர். அதில் இருந்துதான் கொலு வைக்கும் வழக்கம் ஏற்பட்டதாகவும் ஒரு கூற்று நிலவுகிறது.

கொடியவனான மகிஷாசுரன் அழிந்ததால் தேவர்கள் அனைவரும் மகிழ்ந்தார்கள். மகிஷாசுரன் அழிந்த தினத்தை, அன்னை வெற்றிபெற்ற நாளை விஜயதசமியாக கொண்டாடி மகிழ்ந்தனர். மகிஷன் வதத்தின் நினைவாகவே நா்மும் விஜயதசமியை கொண்டாடுகின்றோம்.பொதுவாக கோவில்களில் வில்வம், வேம்பு, அரச மரங்களைப் பார்க்கலாம். இதில் அரசமரத்தை மட்டுமே வலம் வருவது மரபு. ஆனால், விஜயதசமியன்று வன்னி மரத்தை வலம் வந்தால் சிறந்த பலன் கிடைக்கும். பாண்டவர்கள் காட்டில் மறைந்து வாழும் போது, நவராத்திரி காலம் வந்தது. அவர்கள் தங்களது ஆயுதங்களை வன்னி மரம் ஒன்றின் கீழ் ஒளித்து வைத்தனர். பத்தாம் நாள் பராசக்தியை வழிபட்ட பிறகு ஆயுதங்களை எடுத்துக் கொண்டு போருக்கு புறப்பட்டனர். அந்த நாளே விஜயதசமி. இந்த நாளில் வன்னி மரத்தை 21 முறை வலம் வந்தால் நினைத்த காரியங்கள் நிறைவேறும் என்பது ஐதீகம்.

பார்க்க கொடூரமாய் இருந்தாலும் வரங்களை வாரி இறைப்பதில் அவளுக்கு நிகர் அவளே! ராவணனை கொன்ற ராமரும், கர்ணனை கொன்ற அர்ஜுனனும் தங்கள் பிரம்மஹத்தி தோஷம் நீங்க வழிப்பட்டது துர்க்கையைதான். இவளை வணங்க ராகுகாலம் உகந்தது. அமாவாசை, அஷ்டமி, நவமி ஆகிய நாட்களும் இவளை வணங்க ஏற்ற நாட்கள். இவளை வணங்குவதால் ராகுதோஷம் நீங்கும். திருமணம் கைக்கூடும். வெற்றியை அளித்து வாழவைப்பதில் விஷ்ணு அம்சம், பக்தர்களின் தேவைகளை புதிதாய் படைப்பதில் பிரம்மன் அம்சம், பக்தர்களுக்கு நேரும் துன்பங்களை அழிப்பதில் சிவனின் அம்சம் இவள்.

துர்க்கையை வணங்குவோம்... வாழ்வில் எல்லா வளமும் பெறுவோம்.



# உண்மையான பக்தி எப்படி இருக்க வேண்டும்? விவேகானந்தரின் விளக்கம்!

நம்மில் பலரும் கடவுளிடம், தனக்கு அது வேண்டும்; இது வேண்டும் என்று பேரம் பேசுகிறார்கள். 'நீ என்னுடைய விருப்பத்தை நிறைவேற்றினால் நான் உனக்கு இதைக் காணிக்கையாகத் தருகின்றேன்' என்பதுபோல் பேரம் பேசுகிறார்கள். இப்படி பேரம் பேசுவதற்குப் பெயர் பக்தி அல்ல வியாபாரம். இறைவனிடம் எது ஒன்றையும் எதிர்பார்க்காமல் இருப்பதுதான் உண்மையான பக்தி. ஒன்றை எதிர்பார்த்து இறைவனை வேண்டும்போது மனதில் எதிர்பார்ப்பு ஏற்பட்டுவிடுகிறது. வேண்டுவதை இறைவன் அருள்புரியவில்லை என்றால், இறைவன் நம்மை ஏமாற்றிவிட்டதாகவும், நம்முடைய பக்தியை இறைவன் பொருட்படுத்தவில்லை என்றும் நினைக்கத் தோன்றும்.

ஆனால், உண்மை அதுவல்ல. இறைவன் நமக்கு எது நன்மை தருமோ அதை நமக்கு அருள்புரிய சித்தமாகவே இருப்பார். நாம் உளப்பூர்வமான அன்பும் பக்தியும் கொண்டு இறைவனை பிரார்த்திப்பது மட்டும்தான் உண்மையான பக்தி. இதை விளக்கும் வகையில் சுவாமி விவேகானந்தர் கூறிய ஒரு கதையைப் பார்ப்போம்.

மன்னன் ஒருவன் காட்டில் வேட்டையாடச் சென்றான். அங்கு ஒரு முனிவரைக் கண்டான். அவருடன் சிறிது நேரம் பேசியதிலேயே, முனிவரிடம் மிகவும் அன்பும் மரியாதையும் மன்னனுக்கு ஏற்பட்டுவிட்டது. எனவே, முனிவரிடம், ''முனிவர் பெருமானே, தாங்கள் என்னிடம் இருந்து ஏதாவது பெற்றுக்கொள்ளவேண்டும்'' என்று வேண்டினான்.விவேகானந்தர்

அதற்கு அந்த முனிவர், ''எனக்கு எதுவும் வேண்டாம். இப்போது நான் திருப்தியாகவே உள்ளேன். இந்த மரங்கள், நான் உண்பதற்குப் போதிய பழங்களைத் தருகின்றன. இந்த அழகிய நீரோடை

எனக்கு வேண்டிய நீரைத் தருகிறது. இந்தக் குகைகளில் நான் நிம்மதியாக உறங்குகிறேன். நீ மாபெரும் சக்கரவர்த்தியாக இருந்தாலும், நீ தருவதை ஏன் பெற்றுக்கொள்ள வேண்டும்?'' என்று கேட்டார்.

மன்னன் விடவில்லை. ''என்னை திருப்திபடுத்தவாவது தாங்கள் என்னிடம் இருந்து ஏதேனும் பெற்றுக்கொள்ளத்தான் வேண்டும்'' என்று வற்புறுத்தினான்.

மன்னனின் வற்புறுத்தல் தாங்கமாட்டாமல் முனிவர் மன்னனின் அரண்மனைக்கு வருவதாக ஒப்புக்கொண்டார். உடனே மன்னன் தன்னுடைய பணியாளர்களை நகரத்துக்குச் சென்று முனிவரை வரவேற்பதற்கு சிறப்பான ஏற்பாடுகளைச் செய்யும்படி உத்தரவிட்டான்.

நகரத்தில் ஏற்பாடுகள் சிறப்பாகச் செய்யப்பட்டுவிட்டதாகத் தகவல் வந்ததும், முனிவரை அழைத்துக்கொண்டு படை பரிவாரங்களுடன் நகரப் பிரவேசம் செய்தான்.
மன்னனுடன் வந்த முனிவருக்கு கோலாகலமான முறையில் பூர்ணகும்ப மரியாதையுடன் வரவேற்பு உபசாரங்கள் நடைபெற்றன. நகர மக்களின் வரவேற்பு உபசாரங்களை எல்லாம் ஒருவழியாக முடித்துக்கொண்டு, முனிவரை அழைத்துக்கொண்டு அரண்மனைக்கு சென்றான் மன்னன்.

அரண்மனையில் முனிவருக்கு பாதபூஜை போன்ற வைபவங்களை கிரமப்படி செய்து வணங்கிய மன்னன், முனிவரை அழைத்துக்கொண்டு பூஜையறைக்குச் சென்றான். பூஜையறையில் மன்னன் இறைவனிடம், தனக்கு இன்னும் நாடும், பொன்னும்,பொருளும் தருமாறு வேண்டிக்கொண்டான். அனைத்து வசதிகளும் நிரம்பப் பெற்றிருந்த மன்னன் இறைவனிடம் இப்படி பிரார்த்தனை செய்ததைக் கண்ட முனிவர் எழுந்து வெளியில் செல்லத் தொடங்கினார்.

முனிவர் வெளியில் செல்வதைக் கண்ட மன்னன் திகைப்புற்றவனாக, ''சுவாமி, நில்லுங்கள். என்னுடைய உபசாரத்தையும் நன்கொடையையும் ஏற்றுக்கொள்ளாமல் செல்கிறீர்களே? தயவு செய்து என்னிடம் இருந்து எதையாவது பெற்றுச் செல்லுங்கள்'' என்று மன்றாடினான்.

அந்த முனிவரோ, ''மன்னா, நான் பிச்சைக்காரர்களிடம் இருந்து எதையும் பெற்றுக்கொள்வதில்லை. உன்னால் எனக்கு என்ன கொடுக்கமுடியும்? நீயே எப்போது பார்த்தாலும் இறைவனிடம் பிச்சை கேட்டுக்கொண்டு இருக்கிறாய். இந்த நிலையில் நீ எனக்கு எதுவும் தரவேண்டியதில்லை. இறைவனிடம் எதையும் எதிர்பார்க்காத பக்தியை மட்டுமே செலுத்து'' என்று அறிவுரை கூறிவிட்டுச் சென்றார்.
எனவே நாம் இறைவனிடம் எதையும் எதிர்பார்க்காமல், மனத்தூய்மையுடன் பக்தி செலுத்தப் பழகிக் கொள்வோம். நமக்கு என்ன தேவையோ, நமக்கு எது நன்மை செய்யுமோ அதை இறைவன் நமக்கு அருள்புரியவே செய்வான். நம்மிடம் உள்ள அனைத்தையும் இறைவனுக்கு அர்ப்பணிக்கும் அளவுக்கு நம்முடைய பக்தி இருக்கவேண்டுமே தவிர, இறைவனிடம் இருந்து எதுவும் எதிர்பார்ப்பதாக நம்முடைய பக்தி இருக்கக்கூடாது.



# அடுத்தவரின் பணத்தை எடுத்து ஆண்டவனுக்குக் கொடுக்கலாமா? ராமதாசர் கதை சொல்லும் நீதி

எளிமையான அடியவரின் வேண்டுதலுக்கு மனமிரங்கி ஆண்டவனே இறங்கி வந்து ஆட்கொண்ட பல கதைகளை நாம் கேட்டு இருக்கிறோம். வந்தியின் வேண்டுதலுக்கு ஈசன் மண் சுமந்தான். மாணிக்கவாசகரை சிறை யிலிருந்து மீட்க ஈசன் நரியைப் பரியாக்கினான். இப்படி சைவம் பல திருவிளையாடல்களைச் சொல்கிறது. அதைப்போலவே வைணவமும் திருமால் ஆட்கொண்ட பல புண்ணிய அடியார்களை பெருமையோடு சொல்லி வருகிறது. அதில் முக்கியமான ராமபக்தர் ஒருவரைத்தான் இங்கு காணவிருக்கிறோம். பத்ராசலம் ராமதாசர்..ராம நாமத்தின் வழியே பெரும் பக்தி மார்க்கத்தை உருவாக்கிய மகான். எத்தனை துன்பங்கள் வந்தபோதும் ராம பக்தியை விடவே விடாத மெய்யான அடியவர் ராமதாசர்.

1603ம் ஆண்டு ஆந்திராவின் கொல்ல கொண்ட பல்லம் என்ற இடத்தில் லிங்கண்ணா, காமாம்பாள் தம்பதிக்கு மகனாக பிறந்தார் கோபண்ணா என்ற இயற்பெயரைக்கொண்ட ராமதாசர். சிறுவயது முதலே ராமாயணக் கதைகளில் ஆவல் கொண்ட கோபண்ணா, ராமபிரானின் மீது பக்தி கொண்டு வளர்ந்தார். இவரது ஓயாத ராமபக்தி நாளுக்கு நாள் வளர்ந்தது. அப்போது தான் கபீர்தாசர் என்ற புகழ்பெற்ற ஞானி ராமதாசர் கனவில் வந்து ராம நாமத்தை உபதேசம் செய்தார். ராமநாமத்தின் பெருமைகளை சொல்லி ராமனின் திருவடிகளே மோட்சத்தை கொடுக்கும் என்று வலியுறுத்தினார். அன்று முதல் ராமநாமத்தை ஜபிக்கும் வேலையை மட்டுமே செய்து வந்தார் கோபண்ணா. இவரது பக்தியை மெச்சி கபீர்தாசர் 'ராமதாசர்' என்று திருநாமம் இட்டார். பத்ராசலம் பகுதியில் வாழ்ந்ததால் 'பத்ராசலம் ராமதாசர்' என்று புகழப்பட்டார். உறவினர் வேண்டுகோளுக்காக கமலம்மா என்ற பெண்ணை திருமணம் செய்து கொண்டார். இராமனின் திருத்தொண்டராக, இமைப்பொழுதும் அவரது நாமத்தை மறக்காமல் ஓதி வந்த இராமதாசரை சோதிக்க திருவுளம் கொண்டார் இராமபிரான். உளிபட்டால்தானே கல் சிலையாகும்?!. சோதனைகள் வந்தால்தானே தனது பக்தனின் பெருமை உலகம் அறிய வரும் என்று ராமச்சந்திரப் பிரபு எண்ணினார்.

ஒரு ராமநவமி அன்று ராமதாஸரின் வீட்டில் ராம நாமசங்கீர்த்தன நிகழ்ச்சி நடைபெற்றது.

ராமநாமத்தில் லயித்திருந்த ராமதாசரும் அவருடைய மனைவி கமலம்மாவும் தங்கள் பிள்ளையை கண்டுகொள்ளாமல் விட்டு விட்டனர். குழந்தை தவழ்ந்து கொண்டே சென்று, கொதிக்கும் சோற்று பாத்திரத்தில் விழுந்து விட்டான். விசயம் அறிந்த தம்பதிகள் கலங்கினார்கள். ராமபிரானை எண்ணி கதறினார்கள். என்ன ஆச்சரியம்! வாடிவதங்கி இறந்து போன பிள்ளை புதுமலரைப்போல எழுந்தான். எல்லாம் ராமரின் கருணை என்று ராமதாசர் மகிழ்ந்தார். அன்றிலிருந்து முழுக்க முழுக்க ராம தாசராகவே மாறி தனது சொத்துக்கள் முழுவதையும் ராம பக்தர்களுக்கு அள்ளி அள்ளி வழங்கினார். காலம் செல்ல செல்லச் செல்வம் குறைந்து வறியவரானார் ராமதாசர். அப்போதும் ராம பக்தர்களை உபசரிப்பதில் தவறவே இல்லை. வறுமை வாட்டிய நிலையில் ராமதாசரை, அவரது தாய்மாமன்கள் வற்புறுத்தி ஹைதராபாத் மன்னர் தானி ஷாவிடம் தாசில்தாராக பணிக்கு சேர்த்தார்கள். ஆட்சிக்கு உட்பட்ட இடங்களில் வரி வசூலித்து மன்னருக்கு அனுப்புவதே ராமதாஸரின் பணியாக இருந்தது. கொஞ் சகாலம் எல்லாமே நல்லபடியாக நடந்து வந்தது. பத்ராசலத்தில் இருந்த ராமர் ஆலயம் மிகவும் பழுதடைந்து இருந்தது. அதைக்கண்ட ராமதாசர் கவலை கொண்டார். அதை சீர் படுத்த மன்னரின் வரிப்பணத்தை எடுத்து செலவு செய்ய ஆரம்பித்தார். ஆறு லட்சம் வராகன் பணத்தை செலவு செய்து ராமபிரானின் கோ யிலை அழகாக புதுப்பித்தார். அரண்மனைக்கு பத்ராசலம் பகுதிக்கான வரிப்பணம் வந்து சேரவில்லை என்பதை அறிந்த மன்னர் தானி ஷா கோபம் கொண்டார். ராமர் கோயிலை கட்ட அந்த பணம் செலவானது என்று அறிந்ததும் மேலும் சினம் கொண்டு ராமதாசரை கைது செய்தார்.

விசாரணைக்குப் பிறகு 12 ஆண்டுகள் சிறைவாசம் விதித்து ராமதாசரை சிறையில் அடைத்தார். சிறையில் சொல்லொணாத கொடுமையிலும் ராமதாசர் ராமநாமத்தை சொல்லி வந்தார். 12 ஆண்டுகளாக வதைபட்டு, ராமனை எண்ணி பல உருக வைக்கும் பாடல்களை பாடினார். நீயே இனி காக்க வேண்டும் என்று கதறி சரண் அடைந்தார். 12 ஆண்டுகள் முடியும் தறுவாயில் ராமதாசரை காக்க ராமபிரான் திருவுளம் கொண்டார். மன்னர் தானி ஷா முன்னிலையில் ராமபிரானும், அவரது தம்பி லட்சுமணரும் வியாபாரிகளைப்போல வேடமிட்டு வந்தனர். ராமதாசர் கட்ட வேண்டிய ஆறு லட்சம் வராகன் பொன்னையும் மன்னரிடம் கட்டி விட்டு அதற்கான ரசீது சீட்டையும் பெற்றுக்கொண்டனர். பணம் கட்டிய ரசீதை ராமதாசர் அருகில் வைத்து விட்டு சென்றனர்.

மன்னர் தானி ஷா பணம் அளித்தது ராம, லட்சுமணர்கள் என்று அறிந்ததும் மகிழ்ந்தார். உடனடியாக ராமதாசரை விடுவித்தார். மன்னருக்கு காட்சி தந்த ராமபிரான், தனக்கு காட்சி தரவில்லையே என்று ராமதாசர் மனமுருகி பாடலைப்பாட, அவருக்கு ஸ்ரீராமர் காட்சி தந்து, பக்தனே ஆனாலும் மக்கள் பணத்தினை எடுத்து மன்னருக்கு அறிவிக்காமல் தனக்கு கோயில் காட்டியது தவறு என்றும், அதனாலேயே சிறை வாசம் அனுபவிக்க நேர்ந்தது என்றும் கூறினார். ராமரின் திருக்காட்சியை தரிசித்த நாள் முதல் ராமதாசர் ஊர் ஊராக சென்று ராமநாமத்தை பாடி மக்களை பக்தி வழிக்கு திருப்பினார். மக்கள் அவரை அனுமனின் அவதாரம் என்று எண்ணி வணங்கினர். பதினேழாம் நூற்றாண்டில் ராமநாமத்தை பரப்பி மாபெரும் சமயப்புரட்சியை உண்டாக்கியவர் பத்ராசலம் ராமதாசர். இன்றும் அவரது நெஞ்சை உருக்கும் பல பாடல்கள் கர்நாடக சங்கீத கச்சேரிகளில் பாடப்பட்டு வருகிறது. ராமநாமத்தை ஜபித்தபடியே வைகுந்தம் சென்ற இந்த வைணவப்பெரியவர் பக்திக்கு எடுத்துக்காட்டாக என்றும் திகழ்பவர்.



# செருப்பில் தொடங்கி விளக்குமாறில் முடிகின்றது இந்த முருகன் பாட்டு.....!

ஒரு புலவர் காளமேகத்திடம் கேட்டார்.

"ஐயா, நீர் பெரிய புலவர் என்று பேசிக் கொள்கிறார்களே. உம்மால் முருகனைப் புகழ்ந்து பாட முடியுமா?"

"முருகன் அருளால் முடியும். வேலில் தொடங்கவா? மயிலில் தொடங்கவா?" என்றார் காளமேகம்.

"வேலிலும் தொடங்க வேண்டாம். மயிலிலும் தொடங்க வேண்டாம். செருப்பில் தொடங்கி விளக்குமாறில் முடித்தால் போதும்"

என்று குசும்பாகக் கூறிவிட்டார் போட்டிப் புலவர்.

என்ன கொடுமை? இறைவனை, முத்தமிழ் முதல்வனை, செந்தமிழ் தெய்வத்தை, வெல்வேல் அழகனை, கருணைக் கடவுளை, கண்கவர் காளையை, முருகனைப் பாடும் போது செருப்பு என்று தொடங்கி விளக்குமாறு என்று முடிப்பதா? தகுமா? முறையா?

அதை தகும் என்றும் , முறை என்றும் மிகமிக அழகாக நிரூபித்தார் காளமேகம்.... இப்படி.....

" செருப்புக்கு வீரர்களை சென்றுழக்கும் வேலன் பொருப்புக்கு நாயகனை புல்ல மருப்புக்கு தண்தேன் பொழிந்த திரு தாமரைமேல் வீற்றிருக்கும் வண்டே விளக்குமாறே" செரு என்றால் போர்க்களம்.

செருப்புக்கு என்றால் போர்க்களம் புகும் என்று பொருள்படும்.

அப்படி போர்க்களத்தின் புகுந்த வீரர்களை வெற்றி கொள்ளும் முருகனை அணைத்துக் கொள்ளத் துடிக்கிறது உள்ளம்.

குளிர்ந்த தேன் நிறைந்த தாமரை மலர் மேல் வீற்றிருக்கும் வண்டே, அந்த முருகன் இருக்கும் இடத்தை விளக்குமாறே உன்னைக் கேட்கிறேன்.

விளக்குமாறு என்பதற்கு விளக்கம், சொல்லுமாறு என்றும் பொருள் கொள்ளலாம் அல்லவா.....?

இப்படி செருப்பில் தொடங்கி விளக்குமாறில் முடிகின்றது இந்த முருகன் பாட்டு.....!

# வாழ்க்கையை பற்றி பகவத் கீதை சொல்லும் பாதை!



வாழ்க்கை ஒரு சவால் அதனை சந்தியுங்கள். வாழ்க்கை ஒரு பரிசு அதனை ஏற்றுக்கொள்ளுங்கள். வாழ்க்கை ஒரு சாகசப் பயணம் அதனை மேற்கொள்ளுங்கள். வாழ்க்கை ஒரு சோகம் அதனை கடந்து வாருங்கள்.

வாழ்க்கை ஒரு துயரம் அதனை தாங்கிக் கொள்ளுங்கள். வாழ்க்கை ஒரு கடமை அதனை நிறைவேற்றுகள்.

வாழ்க்கை ஒரு விளையாட்டு அதனை விளையாடுங்கள். வாழ்க்கை ஒரு வினோதம் அதனை கண்டறியுங்கள்.

வாழ்க்கை ஒரு பாடல் அதனை பாடுங்கள். வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் அதனை பயன்படுத்தி கொள்ளுங்கள்.


வாழ்க்கை ஒரு பயணம் அதனை புகழுடன் முடித்துவிடுங்கள். வாழ்க்கை ஒரு உறுதிமொழி அதனை நிறைவேற்றுங்கள்.

வாழ்க்கை ஒரு காதல் அதனை அனுபவியுங்கள். வாழ்க்கை ஒரு அழகு அதனை ஆராதியுங்கள்.

வாழ்க்கை ஒரு உணர்வு அதனை உணர்ந்து கொள்ளுங்கள். வாழ்க்கை ஒரு போராட்டம் அதனை எதிர்கொள்ளுங்கள்.

வாழ்க்கை ஒரு குழப்பம் அதனை விடைகாணுங்கள். வாழ்க்கை ஒரு இலக்கு அதனை எட்டிப் பிடியுங்கள்.

பகவத் கீதை சொல்லும் வாழ்க்கை முறையில் வாழ முயற்சி செய்து பார்க்கலாமே!



# துளசிதாசர் எப்படி உருவானார்

முரடனாயிருந்த தன் மகனுக்கு அரண்மனையில் வேலை வாங்கித் தந்தார் தந்தை. மகனுக்கோ வேலை பிடிக்கவில்லை. எனவே, உடனே தன் மனைவியைத் தேடி ஓடினான் மகன். வழியெங்கும் பேய்மழை. ஊரெல்லாம் வெள்ளம். கும்மிருட்டில் தட்டுத்தடுமாறி, ஆற்றைக் கடந்து, மரம் ஏறி வீட்டை அடைந்து கதவைத் தட்டினான். கதவைத் திறந்த அவன் மனைவிக்கு பகீர்என்றது. கணவன் நனைந்து வந்திருப்பதைக் கண்டாள்.

இந்த மழையில் ஆற்றைக் கடந்து எப்படி வந்தீர்கள்?என்றாள்.

ஒரு கட்டையைப் பிடித்து.

கட்டையா... வெள்ளத்தில் பிணங்களல்லவா மிதந்து போய்க் கொண்டிருக்கின்றன? சரி, மாடிக்கு எப்படி வந்தீர்கள்? கீழே கதவு பூட்டி யிருந்ததே?

மர விழுதைப் பிடித்து ஏறி வந்தேன்.

மரவிழுதா? மரவிழுது ஏது எங்கள் வீட்டுக்கு? என்று வியந்து கைவிளக்கை எடுத்து வெளியே பார்த்தாள். மரத்தில் ஓர் மலைப்பாம்பு தொங்கிக் கொண்டிருந்தது.

அப்படி என்ன அவசரம்? என்றாள்.

உன்மேல் உள்ள அவ்வளவு ஆசை!

அழியப்போகும் இந்த உடம்பின் மீது அவ்வளவு ஆசையா? இவ்வளவு ஆசையையும் ராமநாமத்தின் மீது வைத்திருந்தால் நல்ல கதியாவது கிடைக்குமே!

ஒரு கண நேரம் அவளது வார்த்தையைக் கேட்ட அவன் உள்ளத்திலும் ஷ வானத்திலும் ஒரே நேரத்தில் மின்னல்வெட்ட உண்மையை உணர்ந்தான்.

ராமநாம மகிமையைஉளப்பூர்வமக உணர்ந்து அமர கவியானான்.

அவர்தான் பின்னாளில் துளசிதாசஸர் என்ற பெயரில் ராம பக்தராகப் போற்றப்பட்டார்.

அவர் வடமொழியில் எழுதியதுதான் துளசி ராமாயணம் என்ற பிரசித்தி பெற்ற காவிய நூல்!



# Radio-by-Phone

தொலைபேசி இலக்கத்தில்

ஐரோப்பியத் தமிழ் வானொலி



0221 9888014

01 80140659

044 5133032

0330 332 6349

0787 72527

அழையுங்கள் வானொலியைக் கேட்டுமகிழுங்கள்...

மேலதிக விபரங்களுக்கு:

www.etr.fm

ETR

